# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

## உதவி அமர்வு நீதிமன்றம், பொள்ளாச்சி

| | | | |
|---|---|---|---|
| **அமர்வு வழக்கு எண்.** | **234/2023** | **அரசு தரப்பு** | **அ.சா.3** |
| **பெயர்** | **ஜேசுநாதன்** | **தந்தை பெயர்** | **ஞானமுத்து** |
| **வயது** | **56** | **முகவரி** | **வால்பாறை** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873 of 16th day of February 2026.

**(இன்று விசாரணைக்கு எதிரிகள் 2, 3 ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச. பிரிவு - 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது வால்பாறையில் குடியிருந்து வருகிறேன். நான் வால்பாறையில் ஸ்டேஸ்னரி வியபாரம் செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை, சுமார் 8 வருடத்திற்கு முன்பு சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை, எனது பக்கத்து கடைக்கு சில நபர்கள் வந்து கதவை அடைக்க சொல்லி கற்களை எடுத்து வீசினார்கள் என்றும், கண்ணாடி உடைந்து விட்டது என்றும் கேள்வி பட்டேன். சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களை பொறுத்து எனக்கு தெரியாது சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் எனது குடும்பத்துடன் வால்பாறை மெயின் ரோட்டில் உள்ள எனக்கு சொந்தமான வீட்டில் குடியிருந்து வருவதாகவும், கடந்த 30 வருடங்களாக KDJ ஸ்டோர் என்ற பெயரில் ஸ்டேசனரி ஷாப் மற்றும் துணிக்கடை வைத்து நடத்தி வருவதாகவும், எனது கடைக்கு அருகில் லாலூ என்பவர் எனது கடைக்கு அருகில் பாபு ஸ்டோர் என்ற பெயரில் ஸ்டேசனரி ஷாப் வைத்து நடத்தி வருவதாகவும் அவரது தம்பி லோசி என்பவர் பாபு ஏஜென்சி பெயரில் ஏஜென்சி நடத்தி வருவதாகவும் அவரது கடைக்கு அருகில் அவரது சின்ன தமிவி ஆன்ட் ஜோசப் என்பவர் ஹார்டுவேர்கடை வைத்து நடத்தி வருவதாகவும் 05.04.2018 ம் தேதி காலை 10.30 மணியளவில் நான் கடைக்கு வெளியில் நின்று கொண்டிருந்ததாகவும் அப்போது எனது கடைக்கு அருகில் கடை வைர்ததிருக்கும் லாலூ அவரது கடையை திறந்துகொண்டிருந்ததாகவும் அந்த சமயத்தில் DMK கட்சியை சேர்ந்தவர்கள் வால்பாறை காந்தி சிலை அருகில் ஆர்ப்பாட்டம் செய்வதற்காக ஒன்று சேர்ந்ததாகவும் அப்பொழுது அந்த கூட்டத்தில் இருந்த DMK கட்சியை சேர்ந்த சௌந்தரபாண்டி என்பவர் வால்பாறையில் எந்த கடையும் திறக்ககூடாது பாபு ஸ்டோர் கடையை மட்டும் ஏன்டா திறந்தான் அவன் கடையை அடித்து நொறுக்குங்கடா என்று சொன்னதாகவும் அப்போது சவுந்திர பாண்டியுடன் இருந்த எனக்கு ஏற்கனவே நன்றாக தெரிந்த வால்பாறை DMK கட்சியை சேர்ந்த

D.S.செந்தில்குமாரும் முருகாளி எஸ்டேட்டை சேர்ந்த அருண்குமார் என்பவரும் என் கடைக்கு முன்னாடி கிடந்த கல்லை எடுத்து இருவரும் மாறி மாறி கடைக்கண்ணாடியை உடைத்தாகவும் இதை நானும், லாலூ, லாலூ மகன் ஆலன் மற்றும் அருகில் இருந்த ரமேஷ் ஆகியோரும் சேர்ந்து ஏன் இப்படி என் கடை கண்ணாடியை உடைக்கறீங்க என்று சத்தம் போட்டதாகவும் அதற்கு அவுங்க மூன்று பேரும் சேர்ந்து எங்களை எதிர்த்து கேட்கிற அளவுக்கு தைரியம் வந்துடுச்சாடா தாயோலி, உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதாகவும் நானும் எனது அண்ணனும் என்னுடன் இருந்த ரமேஷ், ஆலன், ஏசுதாஷ் ஆகியோரும் சேர்ந்து உயிருக்கு பயந்து தப்பித்து ஓடிவிட்டதாகவும், என் கடையில் பொருத்தியிருந்த கண்ணாடியின் மதிப்பு சுமார் ரூ.70,000/- இந்த பிரச்சனை சம்பந்தமாக லாலூவுடன் நானும் அருகில் இருந்தவர்களும் வால்பாறை காவல் நிலையத்தியத்தில் புகார் கொடுத்ததாக சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் தெரிந்தவர்கள் என்பதால் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி